முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

# AA1 பரீட்சை – 2018 சனவரி

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(ECONOMICS FOR BUSINESS AND ACCOUNTING)

2018-01-27
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச்சொல் உள்ளடங்கிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கான வளங்களின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு (limited availability) எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) அரிதான தன்மை (Scarcity)

(2) சந்தர்ப்பச் செலவு (opportunity cost)

(3) அளவுத்திட்டப் பொருளியல் (Economics of scale)

(4) தெரிவு (Choice)

**1.2** பின்வருவனவற்றுள் சமபயன் வளையி (Indifference curve) ஒன்றின் பண்பியல்பாக (characteristic) அமைவது எது?

(1) இரண்டு சமபயன் வளையிகள் ஒன்றையொன்று இடைவெட்டாது (do not intersect).

(2) ஒரு சமபயன் வளையி சாய்வு இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கி செல்லும்.

(3) சமபயன் வளையியின் சாய்வு பதிலீட்டு எல்லை வீதம் (MRS) என அழைக்கப்படுகிறது.

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.3** பின்வருவனவற்றுள் நிறைபோட்டியின் (Perfect competition) ஒரு பண்பியல்பாக **அமையாதது** எது?

(1) அதிகளவான விற்பனையாளர்கள் இருத்தல்.

(2) அது ஓரினப் பொருட்களை (homogeneous products) விற்பனை செய்தல்.

(3) சந்தையில் எந்த நேரத்திலும் எந்தவொரு விற்பனையாளரும் சுதந்திரமாக நுழையக்கூடியதாக இருத்தல்

(4) அது குறுங்கால ஓட்டத்தில் சாதாரண இலாபங்களை (normal profit) மாத்திரம் உழைத்தல்

**1.4** நீண்ட கால ஓட்டம் தொடர்பில் தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களிலிருந்து **பிழையான** கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) உற்பத்திக் காரணிகள், நிலையான காரணிகளாகவும் மாறும் காரணிகளாகவும் பிரிக்கப் படுகின்றன.

(2) நிறுவனத்தினால் சகல காரணிகளையும் மாற்றக்கூடியதாக இருக்கிறது.

(3) உற்பத்தியில் நிலையான காரணிகள் எதுவுமில்லை.

(4) அளவுத்திட்ட விளைவு (Returns to Scale) நீண்டகால ஓட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**1.5** ஒடுங்கிய பண நிரம்பலின் தொகையும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படுகின்ற கால மற்றும் சேமிப்பு வைப்புகளும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) நாணயத் தளம் (Monetary base)

(2) விரிந்த பணப் பெருக்கி (Broad Money Multiplier)

(3) திரட்டிய விரிந்த பண நிரம்பல் (Consolidated Broad Money Supply)

(4) விரிந்த பண நிரம்பல் (Broad Money Supply)

**1.6** பின்வருவனவற்றுள் வர்த்தக வங்கிகளின் ஓர் தொழிற்பாடு **அல்லாதது** எது?

(1) பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்.

(2) தனிநபர்களுக்கு பாதுகாப்புப் பெட்டகங்களை (Safety vaults) வழங்குதல்

(3) கடன் வசதிகளை வழங்குதல்

(4) நாணய (Currency) விநியோகமும் முகாமையும்

**1.7** பின்வருவனவற்றுள் பணத்திற்கான கேள்வியின் (demanding money) ஒரு நோக்கம் ***அல்லாதது*** எது?

(1) கொடுக்கல் வாங்கல் (Transactions) நோக்கம் (2) கிரய (cost) நோக்கம்

(3) முன்னெச்சரிக்கை (precautionary) நோக்கம் (4) ஊக (speculative) நோக்கம்

**1.8** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக்கான அளவுரீதியான கட்டுப்பாட்டின் (quantitative control) ஓர் கருவியாக (instrument) இருப்பது எது?

(1) தொகுதிப் பட்டியல் உச்சங்கள் (Portfolio ceilings)

(2) மீள்நிதிப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்தல் (Provision of refinance facilities)

(3) வங்கி வீதக் கொள்கை (Bank rate policy)

(4) நயவிணக்கம் (Moral suasion)

**1.9** பின்வரும் எந்த இரண்டிற்குமிடையில் ஒரு மீதியினை பராமரிப்பது வங்கிகளால் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற சவாலாக இருக்கிறது?

(1) திரவத்தன்மை (liquidity) மற்றும் வட்டி வீதம் (2) திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை

(3) இலாபத்தன்மை மற்றும் வைப்புகள் (4) இலாபத்தன்மை மற்றும் பணவீக்கம்

**1.10** இலங்கை மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு இணங்க, 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தனிநபர் வருமானம்:

(1) 3,821 அமெரிக்க டொலர் (2) 3,924 அமெரிக்க டொலர்

(3) 3,280 அமெரிக்க டொலர் (4) 3,835 அமெரிக்க டொலர்

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "**சரியானதா**" அல்லது "**தவறானதா**" என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** வெளியீட்டில் ஏற்படும் வீதப்படியான அதிகரிப்பானது உள்ளீட்டில் ஏற்படும் வீதப்படியான அதிகரிப்பை விட உயர்வாக இருக்கும்போது, அளவுத்திட்ட விளைவு குறைவடையும்.

**1.12** எல்லைக் கிரயம், தரப்பட்ட காலப்பகுதியிலுள்ள வெளியீட்டு அலகு ஒன்றிற்கான கிரயத்துடன் தொடர்புடையது.

**1.13** இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம் பொருளாதாரம் மற்றும் விலை ஸ்திரத்தன்மையைப் பேணுவதாகும்.

**1.14** நிறுவனம் ஒன்று இலாபத்தை உச்சப்படுத்தும்போது அதன் எல்லை வருமானம் (Marginal Revenue - MR) ஆனது எல்லைக் கிரயத்திற்கு (Marginal Cost - MC) சமனாக இருக்கிறது.

**1.15** வர்த்தக வங்கிகள் வைப்புகளில் குறிப்பிட்டதொரு விகிதத்தை ஒதுக்கங்களாகப் பேண வேண்டும் என இலங்கை மத்திய வங்கி நிர்ணயித்துள்ளது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** ....................... *(சந்தை / திட்டமிடப்பட்ட)* பொருளாதாரம் ஒன்றில், விலைப் பொறிமுறையினைப் பயன்படுத்துவதன் ஊடாக அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

**1.17** ....................... *(எல்லை உற்பத்தி / சராசரி உற்பத்தி)* பூச்சியமாக ஆகும்போது, மொத்த உற்பத்தி உச்ச நிலையில் இருக்கும்.

**1.18** ....................... *(உற்பத்தியாளர் மிகை / நுகர்வோர் மிகை)* என்பது பண்டம் ஒன்றின் சமநிலை விலைக்கும் வழங்குநர் விற்பனைக்காகத் தயாரித்த விலைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

**1.19** 2015 ஆம் ஆண்டில் மாறா விலைகளில் (2002) மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.2,500/- பில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டில் மாறா விலைகளில் (2002) மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.2,600/- பில்லியன் ஆகும். 2016 இல் பொருளாதார வளர்ச்சி வீதம்................. *(2% / 4%)* ஆகும்.

**1.20** காலப்போக்கில் பொருளாதாரம் ஒன்றின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு ....................... *(பொருளாதார அபிவிருத்தி / பொருளாதார வளர்ச்சி)* என அழைக்கப்படுகிறது. (ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) உற்பத்திக் காரணிகள் (பொருளாதார வளங்கள்) நான்கினை (04) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பண்டம் ஒன்றின் பின்வரும் கேள்வி ( $Qd$ ) மற்றும் நிரம்பல் ( $Qs$ ) சமன்பாடுகள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

$$Qd = 100 - 2p$$

$$Qs = -50 + 3p.$$

| | | |
|---|---|---|
| Qd | = | கேள்விக் கணியம் |
| Qs | = | நிரம்பல் கணியம் |
| P | = | விலை |

(i) பண்டத்தின் சமநிலை விலையை (Equilibrium price) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) பண்டத்தின் சமநிலைக் கணியத்தைக் (Equilibrium quantity) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) ‘‘குறைந்து செல்லும் எல்லைப் பயன் விதி (Law of Diminishing marginal utility)’’ என்பதால் கருதப்படுவது யாது என்பதை உதாரணம் ஒன்றுடன் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) கேள்வியைத் தீர்மானிப்பவைகள் (determinants of demands) நான்கினை (04) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) அரசாங்கப் பாதீட்டின் பண்பியல்புகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) அரசாங்கத்தினால் நேரில் வரி ஒன்றாக பண்டமொன்றிற்கு அலகு வரி (unit tax) ஒன்று விதிக்கப் படுவதனால் ஏற்படும் விளைவுகளை (consequences) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) ஒப்பீட்டு நயம் (comparative advantage) மற்றும் முழு நயம் (absolute advantage) ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டினை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) பொருளாதாரம் ஒன்றின் ஒரு வருட காலத்திற்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| | **ரூ. (மில்லியனில்)** |
|---|---:|
| தனியார் நுகர்வுச் செலவுகள் | 1,000 |
| அரசாங்க நுகர்வுச் செலவுகள் | 1,500 |
| மொத்த உள்நாட்டு மூலதன அமைப்பு (formation) | 2,500 |
| நிகர (Net) ஏற்றுமதிகள் | 1,300 |
| வெளிநாட்டிலிருந்து நிகரக் காரணி வருமானம் (நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம்) | 650 |
| மூலதனப் பெறுமானத்தேய்வு | 500 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த உள்நாட்டு செலவு (Gross Domestic Expenditure) (04 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) - சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(c) மொத்த தேசிய உற்பத்தி (GNP) - சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(d) நிகர தேசிய உற்பத்தி (NNP) - சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(B) ஒரு நாட்டில், நாணயக் கொள்கை (Monetary Policy) மற்றும் இறைக் கொள்கை (Fiscal Policy) என இரண்டு பிரதான பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் இருக்கின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இறைக் கொள்கை கருவிகளுக்கான (instruments) ஓர் உதாரணத்துடன் இறைக் கொள்கை என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(C) ஒரு நாட்டின் பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஓர் உறுதியான அதிகரிப்பு பணவீக்கம் என அழைக்கப்படுகிறது. கேள்வித் தூண்டல் பணவீக்கம் (demand full inflation) மற்றும் செலவு உதைப்பு பணவீக்கம் (cost push inflation) என்பன பணவீக்கத்தின் பிரதான ஏதுக்கள் (causes) ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

(a) கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பணவீக்கத்தைக் குறைப்பதற்காக ஒரு நாட்டினால் எடுக்கப்படும் மூன்று (03) நடவடிக்கைகளைக் (steps) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |